## EHC தேவைகள் மதிப்பீட்டின்போது வெஸ்ட் சஸ்ஸெக்ஸுக்கு செல்லுதல்

உங்கள் குழந்தைக்கான EHC தேவைகள் மதிப்பீடு நடந்து கொண்டிருக்கும்போது நீங்கள் வெஸ்ட் சஸ்ஸெக்ஸுக்கு இடம்பெயர்வீர்கள் என்றால், உங்களுடைய பயணத்தைப் பற்றி, உங்கள் தற்போதைய நிர்வாக அமைப்பின் கீழ் உள்ள உங்கள் குழந்தையின் பள்ளி மற்றும் சிறப்புக் கல்வித் தேவைகள் மதிப்பீட்டுக் குழுவினரிடம் அதைத் தெரிவிப்பது முக்கியமானதாகும். இதன் மூலம் ஏற்கனவே தொகுக்கப்பட்ட அறிக்கைகள் உட்பட எல்லா பதிவுகளும் விரைவாக வெஸ்ட் சஸ்ஸெக்ஸிற்கு இடமாற்றப்படுவதை உறுதிசெய்யலாம்.

நீங்கள் இடம் மாறியவுடன், EHC தேவைகள் மதிப்பீட்டு செயல்முறையைத் தொடர்வது வெஸ்ட் சஸ்ஸெக்ஸ் கவுண்டி கவுன்சிலின் பொறுப்பாகி விடும்.

## மேலும்விவரங்களுக்கு

உங்கள் குழந்தைக்கு அறிக்கை அல்லது EHCP தரப்பட்டிருந்தால்:

**வெஸ்ட் சஸ்ஸெக்ஸ் சிறப்புக் கல்வித் தேவைகள் மதிப்பீட்டு குழு (SENAT)**

குழு A: (Chichester, Bognor Regis, Selsey, Midhurst)0330 222 8881

குழு B: (Littlehampton, Angmering, Worthing, Shoreham, Steyning, Horsham West)

0330 222 8882

குழு C:(Crawley, Burgess Hill, Horsham East, HaywardsHeath, Cuckfield, East Grinstead) 0330 222 8883

உங்கள் குழந்தைக்கு அறிக்கை அல்லது EHCP தரப்படவில்லை என்றால்:

**வெஸ்ட் சஸ்ஸெக்ஸ் மாணவர் சேர்க்கை குழு**

0333 014 2903

## எங்களைத் தொடர்பு கொள்ள

**West Sussex SEND Information, Advice and Support Service**
Oriel Lodge
St James Campus
St James Road
Chichester
West Sussex
PO19 7HA

**மின்னஞ்சல்:** send.ias@westsussex.gov.uk

**இணையதளம்:** http://westsussex.local-offer.org/services/7




எல்லா பெற்றோருக்கும் பாகுபாடற்ற தகவல்கள், ஆலோசனைகள் மற்றும் ஆதரவு சென்று சேர்வதை உறுதிப்படுத்துவதே WS SEND IAS இன் பங்காகும், இதன் மூலம் பெற்றோர், தங்கள் குழந்தையின் சிறப்புக் கல்வித் தேவைகளைப் பற்றிய தகவல் அறிந்த முடிவுகளை எடுக்க முடியும். பாதிப்பு உடைய குடும்பங்களுக்கு அவர்களுடைய சூழல்களில் உதவக்கூடிய தனிநபர்கள், சேவைகள் அல்லது ஏஜென்சிகளுடன் பகிர்ந்து கொள்வதற்கான அனுமதி பெறப்பட்டால் தவிர WS SEND IAS உடன் பகிர்ந்து கொள்ளப்படும் தகவல்கள் ரகசியமாகவே வைக்கப்படும்.

**www.westsussex.gov.uk**

WS2705 09.16

# West Sussex SEND தகவல், ஆலோசனை மற்றும் ஆதரவு சேவை

## வெஸ்ட் சஸ்ஸெக்ஸுக்கு செல்லுதல்



west sussex county council

## அறிமுகம்

வீடு மாறி செல்லும்போது கவனம் செலுத்தவும் ஒழுங்கமைக்கவும் ஏராளமான விஷயங்கள் இருக்கும், அதனால் ஏதேனும் ஒன்றைத் தவற விடவோ அல்லது கடைசி நிமிடம் வரை செய்யாமல் விட்டு விடவோ வாய்ப்புள்ளது. கூடுதல் ஆதரவு தேவைப்படும் உங்கள் குழந்தையை ஒரு புதிய பள்ளியில் சேர்க்கும்போது, எந்தச் சிக்கலும் இல்லாமல் புதிய பள்ளிக்கு அவர்கள் மாறுவதை உறுதிப்படுத்த, நீங்கள் கூடிய விரைவில் முன்னதாகவே திட்டமிடத் தொடங்குவது மிகவும் முக்கியமானது.

இந்த வழிகாட்டியில் நீங்கள் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் வெஸ்ட் சஸ்ஸெக்ஸ் கவுண்டிக்கு நீங்கள் வரவிருக்கிறீர்கள் என்று தெரிந்தவுடன் கவுண்டியின் கவுன்சில் செய்யவிருக்கும் ஏற்பாடுகள் ஆகியவற்றைப் பற்றிய ஆலோசனைகள் தரப்பட்டுள்ளன.

## SEN ஆதரவு

உங்கள் குழந்தை தற்போது SEN ஆதரவில் பதிவுசெய்திருந்தால் (அதாவது, சிறப்புக் கல்வித் தேவைகள் அறிக்கை அல்லது ஒரு கல்வி, உடல்நலம் மற்றும் கவனிப்பு திட்டத்தைப் (EHCP) பெற்றிருக்காவிட்டால்), உங்கள் புதிய முகவரி மற்றும் இடம்மாறுவதற்கான உறுதிசெய்யப்பட்ட தேதி ஆகிய ஏற்பாடுகளை இறுதி செய்தவுடன் நீங்கள் வெஸ்ட் சஸ்ஸெக்ஸ் மாணவர் சேர்க்கை குழுவை 0333 014 2903 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு பேச வேண்டும். உங்கள் குழந்தையின் வயதிற்குப் பொருத்தமான வகுப்பில் எந்தெந்த உள்ளூர் பள்ளிகளில் இடம் இருக்கிறது என்று அவர்கள் உங்களுக்குத் தெரிவிக்க இயலும், மேலும் 'வருட இடைக்காலத்தில் சேர்வதற்கான ஒரு விண்ணப்பப் படிவத்தை' நிரப்புமாறு கோருவார்கள், அதில் உங்கள் விருப்பத் தேர்வின் அடிப்படையில் வரிசைப்படுத்திய மூன்று பள்ளிகள் வரை குறிப்பிடுமாறு கேட்பார்கள். விண்ணப்பப் படிவத்தை நிரப்புவதில் உங்களுக்கு உதவி தேவைப்பட்டால், West Sussex SEND தகவல், ஆலோசனை மற்றும் ஆதரவு சேவையைத் (WS SEND IAS) தொடர்பு கொள்ளவும், அவர்கள் இதில் உங்களுக்கு உதவுவார்கள்.

வேறொரு கவுண்டி அல்லது உள்ளூர் நிர்வாகப் பகுதியிலிருந்து நீங்கள் வெஸ்ட் சஸ்ஸெக்ஸிற்கு இடம்பெயர்கிறீர்கள் என்றால், உங்கள் குழந்தையின் முந்தைய பள்ளி, உங்கள் குழந்தையின் பள்ளி பதிவேடுகளை, உங்கள் குழந்தை அங்கு பதிவிலிருந்து விலகிய 15 பள்ளி நாட்களுக்குள் அனுப்பி வைக்க வேண்டும். ஆனாலும், இடமாற்ற ஏற்பாடுகள் முன்னதாகவே செய்யப்படும்போது, புதிய பள்ளிக்கு சரியான நேரத்தில் தகவல்களை அளிப்பது நல்ல நடைமுறையாகும். இதன் மூலம் உங்கள் குழந்தையின் தனிப்பட்ட கற்றல் திட்டத்தில் விளக்கியுள்ளபடி, கற்பித்தல் முறைகள், உபகரணங்கள் அல்லது விசேஷ உதவிகள் போன்ற உங்கள் குழந்தையின் தேவைகளுக்கு ஏற்ப முன்னதாகவே பள்ளியால் திட்டமிட முடியும்.

உங்கள் குழந்தையின் எல்லா சிறப்பு தேவைகள் பதிவுகளும் ஆவணங்களும் புதிய பள்ளிக்கு அனுப்பப்பட வேண்டும், இதில் சிறப்புக் கல்வித் தேவைகள் ஒருங்கிணைப்பாளர் (SENCo) சேகரித்த ஏதேனும் விரிவான பின்னணி தகவல்கள், தனிப்பட்ட கற்றல் திட்டங்கள் மற்றும் உங்கள் குழந்தையுடன் செயலாற்றிய ஏதேனும் நிபுணத்துவம் பெற்ற ஆசிரியர்கள் அல்லது கல்வி உளவியலாளர்கள் போன்றோரின் ஆலோசனைகள் போன்றவையும் அடங்கும்.

உங்கள் குழந்தையின் சிறப்புக் கல்வித் தேவைகளையும், அந்தத் தேவைகளைப் பூர்த்திசெய்ய அவர்கள் வழங்க வேண்டிய உதவிகளையும் முழுமையாகப் புரிந்து கொள்ள, புதிய பள்ளி உங்கள் குழந்தையின் தனிப்பட்ட கற்றல் திட்டத்தை சாத்தியமான அளவு விரைவாக மதிப்பாய்வு செய்ய விரும்பக்கூடும்.

குறிப்பு. யுகேவிற்கு வெளியே உள்ள சில பகுதிகளில் அறிக்கை/EHCP அமைப்பு பயன்படுத்தப்படுவதில்லை, அதனால், அறிக்கை அல்லது EHCP இல்லாமல் உங்கள் குழந்தையை ஒரு விசேஷ பள்ளியில் படிக்க வைக்க வேண்டியிருக்கலாம். இப்படி ஒரு நிலை ஏற்பட்டால், வெஸ்ட் சஸ்ஸெக்ஸிற்கு வந்தவுடன், மாணவர் சேர்க்கை குழுவை 0333 014 2903 என்ற எண்ணில் தொடர்பு கொள்வது முக்கியமானதாகும். இதன் மூலம் வழக்கமான பள்ளிகளில் இடம் பெறுவதும், EHC தேவைகள் மதிப்பீட்டைச் செய்ய வேண்டுமா என்றும் சிறப்புக் கல்வித் தேவைகள் மதிப்பீட்டுக் குழு (SENAT) பரிசீலிப்பதும் உறுதிசெய்யப்படும். இதன் தொடர்ச்சியாக, EHCP வழங்கப்படலாம் மற்றும், பொருந்தினால், அவர்களுடைய சிறப்பு பள்ளிகளில் ஒன்றில் சேர்க்கப்படலாம். EHC தேவைகள் மதிப்பீட்டைமுடிப்பதற்கு முன்பு, 'அவசரகால சேர்க்கைகளை' SENAT பொதுவாக செய்வதில்லை.

நீங்கள் வெஸ்ட் சஸ்ஸெக்ஸிற்கு இடம்பெயர திட்டமிட்டிருந்தால், நீங்கள் செய்ய வேண்டிய முதல் விஷயம், உங்கள் தற்போதைய உள்ளூர் நிர்வாகத்தின் சிறப்புக் கல்வித் தேவைகள் மதிப்பீட்டுக் குழுவைத் தொடர்பு கொண்டு நீங்கள் இடம்பெயர்வதைத் தெரிவிக்க வேண்டும். இந்தக் குழுவே உங்கள் குழந்தையின் அறிக்கை/EHCPஐ மேற்பார்வையிடும், அறிக்கை/EHCP தொடர்பாக நீங்கள் பெற்றுள்ள எந்தவொரு கடிதத்திலும் அவர்களுடைய தொடர்பு விவரங்களை நீங்கள் காணலாம்.
அவர்களிடம் நீங்கள் பின்வரும் விவரங்களை வழங்க வேண்டும்:

- உங்கள் தற்போதைய மற்றும் இடம்பெயரவிருக்கும் முகவரிகள்
- நீங்கள் இடம்பெயரும் தேதி
- உங்கள் குழந்தை தற்போது பயிலும் பள்ளியின் பெயரும் வகையும்
- நீங்கள் இடம்பெயர்ந்து செல்லும் இடத்தின் உள்ளூர் நிர்வாகத்தின் பெயர் - (வெஸ்ட் சஸ்ஸெக்ஸ்)

அதன் பிறகு புதிய நிர்வாக அமைப்பின் சிறப்புக் கல்வித் தேவைகள் மதிப்பீட்டுக் குழுவைத் (SENAT) தொலைபேசியில் தொடர்பு கொள்ள வேண்டும், அவர்கள் நீங்கள் இடம் மாறி செல்வதற்குள், பள்ளிகளின் பட்டியல்களை அனுப்பி வைப்பார்கள். நீங்கள் ஏற்கனவே வெஸ்ட் சஸ்ஸெக்ஸிற்கு வந்துவிட்டிருந்தாலும், பள்ளிகளின் பட்டியலை அனுப்பி வைக்குமாறு கேட்கலாம் அல்லது எந்தப் பள்ளியைப் பரிசீலிக்க வேண்டும் என்று உங்களுக்கு முன்பே தெரிந்திருக்கலாம்

இடம்பெயரும்போது, முந்தைய கவுன்சில் அளித்த குழந்தையின் அறிக்கை/EHCP-ஐ SENAT உங்களிடம் கேட்கும். உங்கள் குழந்தையின் தேவைகளை முழுமையாகப் புரிந்து கொள்வதை உறுதிப்படுத்துவதற்காக, அவர்கள் சமீபத்திய வருடாந்தர மதிப்பாய்வு அறிக்கைகள் உட்பட உங்களுடைய குழந்தையின் முந்தைய அறிக்கைகள் அனைத்தையும் கேட்பார்கள். சில நேரங்களில், இந்த நகல்கள் அனைத்தும் கிடைக்கும் வரை அவர்களால் தெளிவான ஆலோசனையை வழங்க முடியாமல் இருக்கலாம்.

நீங்கள் இடம்பெயர்வதற்கு முன்பு, தங்களால் முடிந்த அனைத்தையும் SENAT செய்யும் – நீங்கள் ஏற்கனவே ஒரு குறிப்பிட்ட பள்ளியில் இடம் கேட்கிறீர்கள்என்றால், அவர்கள் அந்த பள்ளிக்கு ஆவணங்களை அனுப்பி, உங்கள் குழந்தையின் தேவைகளை நிறைவேற்ற முடியுமா என்று கேட்பார்கள். ஆனாலும், SENAT நீங்கள் வசிப்பதற்கான ஆதாரத்தைப் பெறும்வரை, சேர்வதற்கான கோரிக்கையைச் செய்ய முடியாது, இந்த ஆதாரங்கள் பின்வருமாறு:

- உங்கள் வாடகை ஒப்பந்தம்
- உங்கள் வழக்கறிஞரிடமிருந்து ஒரு கடிதம், அல்லது
- புதிய முகவரியில் உங்கள் பெயரைக் கொண்டிருக்கும் ரசீது

உங்கள் குழந்தையின் அறிக்கை/EHCP இடம் மாற்றப்பட்ட பிறகு, வெஸ்ட் சஸெக்ஸ் கவுண்டி கவுன்சிலே, அறிக்கை/EHCP-ஐ பராமரிப்பது, அதில்விளக்கப்பட்டுள்ள உதவியை வழங்குவது ஆகியவற்றுக்குப் பொறுப்பாகும்.

உங்கள் குழந்தையின் அறிக்கை/EHCP இடம் மாற்றப்பட்ட பிறகு, SENAT அறிக்கை/EHCP-ஐ மதிப்பாய்வு செய்ய முயலலாம், மேலும் முந்தைய மதிப்பீடு எப்போது நிகழ்ந்திருந்தாலும், ஒரு புதிய மதிப்பீட்டை நடத்தக் கூடும். கவுன்சில் உங்கள் குழந்தையின் சிறப்புக் கல்வித் தேவைகளையும், அந்தத் தேவைகளைப் பூர்த்திசெய்ய அவர்கள் வழங்க வேண்டிய உதவிகளையும் முழுமையாகப் புரிந்து கொள்வதை உறுதிசெய்யவே இவ்வாறு செய்யப்படுகிறது. இந்தச் செயல்பாடுகளில் ஏதேனும் உங்களுக்கு உதவி தேவைப்பட்டால், WS SEND IAS-ஐத் தொடர்பு கொள்ளவும், அவர்கள் உதவுவார்கள்.

இடமாற்றல் தேதிக்குப் பின் ஆறு வாரங்களுக்குள், வெஸ்ட் சஸ்ஸெக்ஸ் கவுண்டி கவுன்சில், உங்கள் குழந்தையின் அறிக்கை/EHCP-ஐ மதிப்பாய்வு செய்யப் போகிறார்களா அல்லது கல்வி சட்டத்தின் 323ஆம் பிரிவின்படி புதிய மதிப்பீட்டை நடத்த விரும்புகிறார்களா என்று தெரிவித்தாக வேண்டும்.

## உங்கள் குழந்தையின் அறிக்கை அல்லது EHCP-இல் புதிய பள்ளியின் பெயரைக் குறிப்பிடல்

அறிக்கை/EHCP பெற்றுள்ள குழந்தைக்கு, பள்ளிகளுக்கான விண்ணப்பங்கள், உள்ளூர் நிர்வாகத்தின் சிறப்புக் கல்வித் தேவைகள் மதிப்பீட்டுக் குழுவாலேயே (SENAT) செய்யப்பட வேண்டும். குறிப்பிட்ட பள்ளியில் சேர்த்துக் கொள்ள, அறிக்கையின் பகுதி 4 அல்லது EHCP-இன் பிரிவு 1இல் திருத்தப்பட்டது போல, உள்ளூர் நிர்வாக அமைப்பின் ஒப்புதல் அந்தப் பள்ளிக்கு தேவை. அறிக்கை அல்லது EHCP-இல் செய்யப்படும் எல்லா மாற்றங்களையும் போலவே, இதற்கும் உங்களுக்கு மேல்முறையீடு செய்ய உரிமைகள் இருக்கும்.

நீங்கள் இடம்பெயர்ந்த பிறகு, சாத்தியமான அளவு விரைவாக, உங்கள் குழந்தையை சரியான பள்ளியில் சேர்ப்பதை அல்லது வசதிகளை வழங்குவதைஉறுதிசெய்ய வெஸ்ட் சஸ்ஸெக்ஸ் கவுண்டி கவுன்சில் முயற்சி செய்யும்.

பின்வருவனவற்றுடன் உடன்பட்டிருந்தால், சிறப்புக் கல்வித் தேவைகள் கொண்ட குழந்தைகளில் பெரும்பாலானோர், வழக்கமான பள்ளிகளிலேயே பயில்வதைஉறுதிசெய்யும் உட்சேர்த்தல் கொள்கையை கவுண்டி பின்பற்றுகிறது:

- வளங்களைத் திறம்பட பயன்படுத்தல்
- குழந்தையின் தேவைகள் மற்றும் வகுப்பில் உள்ள மற்ற குழந்தைகள் மற்றும்
- பெற்றோர்களின் விருப்பங்கள்

பள்ளியின் பெயரைக் குறிப்பிடும் கடமையும் வெஸ்ட் சஸ்ஸெக்ஸ் கவுண்டி கவுன்சிலுக்கு மாறக்கூடும். உங்கள் குழந்தையின் அறிக்கை/EHCP-இல் குறிப்பிடப்பட்ட பள்ளி உங்கள் குழந்தை செல்ல முடியாத அளவு தொலைவில் இருக்கலாம், அதனால் வெஸ்ட் சஸ்ஸெக்ஸ் கவுண்டி கவுன்சில் புதிய பள்ளியைக் குறிப்பிட வேண்டியிருக்கலாம்.

வழக்கமான வசதிகள், வழக்கமான பள்ளிகளில் நிபுணத்துவ கற்பித்தல் வசதிகள் முதல் உள்ளூர் நிர்வாக அமைப்பின் சிறப்பு பள்ளிகள் வரை, தரவேண்டிய சிறப்பு வசதியின் வகைகளை வெஸ்ட் சஸ்ஸெக்ஸ் கவுண்டி கவுன்சில் அறிந்திருக்கிறது.

சில நேரங்களில், நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள் என்பதைப் பொறுத்து, SENAT பயண நேரம் நியாயமானது என்று கருதினால், உங்கள் குழந்தை தற்போதைய பள்ளியிலேயே தொடர வேண்டியிருக்கலாம்.

TAMIL